[6th September 1960

SRI P. G. MANICKAM : தியாகிகளுக்கு மட்டுந்தானா இவ்வித சலுகை அளிக்கப்படும் ? அவர்களுடைய உற்றார் உறவினருக்கும் அளிக்கப்படுமா ? அவ்வாறு அளிக்கப்பட்டால், யார் யாருக்கு அளிக்கப்படும் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தியாகிகள் எல்லாம் பள்ளிக்கூடத்திற்கு வருகிற வயதினராக இருப்பார்களா என்று தெரியாது. தியாகிகளின் குழந்தைகள், பேரன்மார்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பதுதான் திட்டம்.

SRI P. S. CHINNADURAI : ராஜ்யத்திலேயுள்ள அரசியல் தியாகிகளின் ஜாப்தா ஒன்றை, மாவட்டவாரியாகத் தயாரித்து அங்கத்தினர்களுக்குக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது அதைப் பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை. பூரா ஜாப்தாவும் தயாரிக்கப் பட்டிருக்கிறதா இல்லையா என்பதைப்பற்றி தெரிந்துகொள்ள கனம் அங்கத்தினருக்கு அக்கறை இருக்குமானால், வேறு கேள்வி போடலாம். அல்லது சர்க்காருக்கு எழுதலாம்.

MR. SPEAKER : இன்னும் ஐந்து கேள்விகள் இருக்கின்றன. தயவுசெய்து மேலும் ஐந்து நிமிஷங்கள் எடுத்துக்கொண்டு கேள்விகளை முடிக்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

Ministers' tour

*485-A Q.—SRI P. S. CHINNADURAI : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) முதல் அமைச்சரும், தொழில் அமைச்சரும் 1960, மே மாதத்தில் தஞ்சை ஜில்லாவில் சுற்றுப் பிரயாணம் செய்து என்ன வேலை செய்தார்கள் ?

(ஆ) அதன் விளைவாக சர்க்காருக்கும் மக்களுக்கும் ஏற்பட்ட பயன் என்ன ?

(இ) இதனால் ஏற்பட்ட பணச் செலவு எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The tour was undertaken by the Chief Minister and the Minister for Industries mainly to explain the provisions of the Land Ceiling Bill to the public. In addition, they inspected certain developmental works in the district and fulfilled certain public functions.

(*b*) Their tour was in the public interest.

(*c*) The expenditure incurred by the Government in regard to the tour was Rs. 400 only.

6th September 1960]

SRI P. S. CHINNADURAI : இந்த சுற்றுப் பிரயாணத்தின் போது பல கிராமங்களுக்கு விஜயம் செய்வதற்கான வாய்ப்பு முதல் அமைச்சர் அவர்களுக்கு ஏற்பட்டது. அதனால் அநேகமாக நன்மையே ஏற்பட்டிருக்கும் என்று கருதுகிறேன். இதைப் போல கோவை ஜில்லாவில் பல்லடம் தாலுகா பகுதியிலே முதல் அமைச்சர் அவர்களும், விவசாயத் துறை அமைச்சர் அவர்களும் சுற்றுப்பிரயாணம் செய்ய முன்வருவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் அவர்களே இதுமாதிரி மந்திரிகளை சுற்றுப்பிரயாணம் செய்ய வேண்டும் என்று அழைத்ததை நான் வரவேற்கிறேன். அவர்கள் அந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நான் நம்பு கிறேன்.

Schools for the blind

* 485-B *Q.*—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப் பாரா—

(அ) 1960-ல் சென்னை ராஜ்யத்தில் (1) அரசாங்கத்தாரால, (2) தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் குருடர்களுக்கான பள்ளிக்கூடங்கள் எத்தனை ?

(ஆ) இப்பள்ளிக்கூடங்களிலே எத்தனை மாணவர்களும், மாணவிகளும் படிக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Government Schools 2 and Private Schools 3.

(*b*) 314 boys and 157 girls as on 31st March 1959.

SRI P. G. MANICKAM : இவர்களுக்கு தொழில் பயிற்சிகூட அளிக்கப்படுகிறதா? அவ்வாறு தொழில் பயிற்சி அளிக்கப்பட்டால் எந்தவிதமான தொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆம், இவர்களுக்கு தொழில் பயிற்சியும் அளிக்கப்பட்டு வருகிறது. இதுமாதிரி கண் இல்லாதவர்கள் செய்யக்கூடிய பல தொழில்கள் இருக்கின்றன. 'டைப்ரைடிங், கார்பெண்டரி வொர்க், பாஸ்கெட் வீவிங்,' இது மாதிரி பல தொழில்கள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன.

Pay Commission

* 485-C *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to make the rules issued on the recommendations of the Pay Commission applicable to persons who have retired and have been re-employed and are actually on duty on the date of the issue of these rules?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

SRI N. K. PALANISAMI : Sir, since the re-employed persons continue to do the same work, will the Government be pleased to make these rules applicable to them?